**சூரியவெவ பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சூரியவெவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சூரியவெவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் மோட்டர் கிரேடர் இயந்திரம் மற்றும் JCB இயந்திரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கணக்குகளிடையே மாற்றப்பட்டிருந்த ரூபா 4,448,513 தொகை சபையின் வருமானம் ஒன்று மற்றும் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவு அந்த தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடங்களில் கணக்கு தயாரிக்கும் போது இவ்வாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் பதிவு செய்யப்படமாட்டாது. | பிரிவுகளிடையே இனங்காணப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யக் கூடாது. |
| (ஆ) | மதுனாகல குப்பை முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக மின்சார தொடர்பு பெற்றுக் கொள்வதற்காக செலுத்தியிருந்த ரூபா 974,067 இற்கான செலவு மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2024 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 03 காசுக் கணக்குகள் இடையே ஏற்பட்டிருந்த ரூபா 241,990 இற்கான பணப் பரிமாற்றம் அந்தக் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளாமல் நடைமுறை சொத்தொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுகளின் போது பணப் பரிமாற்றம் சரியாக பதிவு செய்யப்படும் என. | கணக்குகளிடையே மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2022 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட சூரியவெவ வாராந்த சந்தை பொது கழிவறை திருத்த வேலை மேற்கொள்வதற்காக மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 2,089,866 இற்கான நிர்மாண வேலைக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் பொதுக் கடன்பட்டோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலவுகள் சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபை நிதியத்தின் கடன்பட்டோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்டோர் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மதுனாகல குப்பை செயற்களத்தை சுற்றி மின்வேலி ஒன்று நிர்மாணிப்பதற்காக உழைப்பு கூலி தவிர செலவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 1,395,382 தொகை எனினும் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் ரூபா 2,000,000 தொகை என மூலதனப்படுத்தியிருந்தமையால் ரூபா 604,618 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் கணக்குகளின் மூலம் சரி செய்யப்படும் என. | மூலதனச் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | முயற்சி பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் 2024 ஆண்டிலும் செயற்படுத்துவதற்காக செலவு மேற்கொள்வதற்காக ரூபா 1,020,000 இற்கான உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | முன்பள்ளி சிறார்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக செயற்படுத்தப்பட்டதென. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 500,000 இற்கான நிலுவை சம்பள மீளளிப்பு தொகையை திரண்ட நிதிக்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வருமானம் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடங்களின் கணக்கு தயாரிக்கும் போது சரியாக சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வுகளுக்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,700,000 தொகை ஆண்டு இறுதியில் உள்ளவாறு பொறுப்பு ஒன்றென கணக்கீடு செய்திருந்ததுடன், அதற்குரிய வகைப்படுத்தல் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வகைப்படுத்தல் பொழிப்பு சபைக்கு கிடைத்திருக்கவில்லை என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134 (1) | 2017 ஆண்டில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் இனங்கண்டிருந்த 02 பிரிவுகளில் அமைந்துள்ள 1159 ஆதனங்களுக்காக 2023 ஆண்டின் போது வீதவரி அறவீடு செய்திருக்கவில்லை. | வீதவரி பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்காக முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது என. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132 (ஓ) | 2023 ஆண்டிற்காக மாத்திரம் சுவபோசனி போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், மீளாய்வாண்டின் போது செலவு மேற்கொள்வதற்காக ரூபா 1,020,000 இற்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டு 2024 ஏப்ரல் 05 திகதி அளவில் ரூபா 478,207 தொகை செலவிடப்பட்டிருந்தது. | முன்பள்ளி சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது என. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 16,371,525 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 18,326,764 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,131,000 | 2,921,420 | 2,987,555 | 94,035 | 2,163,000 | 1,273,390 | 3,381,060 | 160,170 |
| வாடகை | 41,775,500 | 45,733,014 | 51,963,710 | 5,989,886 | 36,585,500 | 31,583,026 | 24,767,841 | 12,220,577 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,379,000 | 1,695,600 | 2,474,175 | 108,200 | 1,440,600 | 1,427,004 | 2,115,154 | 886,775 |
| ஏனைய வருமானங்கள் | 4,718,500 | 4,221,076 | 6,479,466 | 2,580,765 | 4,725,200 | 7,955,038 | 5,216,908 | 4,839,156 |
| மொத்தம் | 50,004,000 | 54,571,110 | 63,904,906 | 8,772,886 | 44,914,300 | 42,238,458 | 35,480,963 | 18,106,678 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 55 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 877,648 இற்கான வாடகை மற்றும் 91 வர்த்தக அலகுகளில் இருந்து 2019 மற்றும் 2023 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப் பகுதிக்காக பெற வேண்டிய ரூபா 69,500 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் முறையே 159(1) மற்றும் 149 பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறை வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் முறையே ரூபா 141,076 தொகை மற்றும் ரூபா 13,500 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவையில் ரூபா 3,000 இற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 11 குத்தகை ஆதனங்களின் வியாபாரம் செய்யும் உரிமையை வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக பெற வேண்டிய ரூபா 2,206,556 தொகை மற்றும் 10 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய ரூபா 452,591 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாடகை ஆதன நிலுவையில் ரூபா 907,032 தொகை அறிவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 481,239 தொகை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் மற்றும் ஒரே தடவையில் பெறும் பணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 3,313,665 தொகை மற்றும் ரூபா 729,500 தொகை காணப்பட்டது. | நீதிமன்றத் தண்டப்பண நிலுவையில் ரூபா 1,501,000 தொகை கிடைத்திருந்தது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பதவிக் காலம் 2023 மார்ச் 18 திகதி முடிவடைந்திருந்ததுடன், மார்ச் மாதத்திற்குரிய உறுப்பினர் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தொலைபேசி கொடுப்பனவு செலுத்தும் போது 18 நாட்களுக்கு மாத்திரம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாமல் மார்ச் மாதத்திற்கான முழுக் கொடுப்பனவு செலுத்தியிருந்தமையால் மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 86,598 தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகையாக செலுத்தியிருந்த தொகையினை அறவீடு செய்வதற்காக உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டதென. | மிகையாக செலுத்திய தொகையை பொறுப்பான தரப்பினரிடம் அறவிடப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 78 வியாபார நிலையங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையால் சபை நிதியத்திற்கு ரூபா 351,000 இற்கான வருமானம் ஒன்றினை இழந்திருந்தது. | 08 நிறுவனங்களினால் தற்போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், கணிப்பீட்டலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் கட்டிடங்கள் நிர்மாணித்தல், அங்கீகரித்த அளவை மிகைத்து நிர்மாண அலுவல்கள் மேற்கொள்ளல், இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமை ஆகிய விடயங்களுக்காக 03 கட்டிட வரைபுகள் தொடர்பாக ரூபா 118,774 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 31,033 தொகை அறவிடப்பட்டதெனவும், மீதியான நிலுவைத் தொகையை அறவிடப்படும் எனவும். | நிலுவைத் தொகை விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 12 வர்த்தகக் கட்டிடங்கள் 20 குடியிருப்புக் கட்டிடங்கள் மற்றும் 05 எல்லை மதில்கள் தொடர்பாக குறிப்பிட்ட காலத்தினுள் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்தினால் நீடித்து ரூபா 185,000 இற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செல்லுபடியாகும் காலத்ததை நீடித்துக்கொள்ளும் படி நினைவூட்டல் கடிதம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்பட்டது என. | செல்லுபடியாகும் காலத்தை நீடித்து கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் அனுபவித்து வரும் 07 காணிகளின், 07 மாயானங்களின் மற்றும் 02 வாகனங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் மற்றும் மயானங்கள் உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபை நிதியத்திலிருந்து ரூபா 21,608,724 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் மற்றும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 04 கடையறைகள், நூலகக் கட்டிடமொன்று, சமூக நீர்ச் செயற்திட்டமொன்று மற்றும் நீர் தாங்கிக் கோபுரம் பயன்படக்கூடிய கருமம் ஒன்றுக்காக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 04 கடையறைகளுக்காக வழக்கொன்று காணப்படுவதுடன், நூலகக் கட்டிடம் சிதைவடைந்துள்ளதுடன், நீர்ச் செயற்திட்டம் முடிவடைந்தமையால் பயன்படுத்தாமல் காணப்பட்டது என. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையின் பயன்பாட்டிற்காக 2012 நவம்பர் 03 திகதி கொள்வனவு செய்திருந்த 750x20 அளவான மீள்நிரப்பப்பட்ட 02 டயர்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட காலம் மீளாய்வாண்டு இறுதியளவில் 11 ஆண்டுகளை விட மிகையாக காணப்பட்டதால் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மிகைத்து இருந்த போதிலும் அந்த டயர்களை பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள், கருமங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதுனாகல குப்பை செயற்களத்தின் காவலரணிற்கு அண்மையில் கமெரா முறைமையொன்று பொருத்துவதற்காக 2021 திசெம்பர் 31 திகதி களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த பண்டங்களுக்காக 2022 ஜனவரி 22 திகதிய ரூபா 355,950 தொகை செலுத்தியிருந்த போதிலும் அந்த சொத்துக்களை பயன்படுத்தாமல் கணக்காய்வுத் திகதி வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | கமெரா முறைமை பொருத்துவதற்காக வழங்குனர் ஒருவரை தெரிவு செய்து பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கொள்வனவு செய்த சொத்துக்களின் உத்திரவாத காலத்தினுள் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் சபை நிதியத்திலிருந்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 5,500,000 தொகைக்கான 15 அபிவிருத்தி செயற்திட்டங்கள் ரூபா 500,000 தொகைக்கான ஒரு அபிவிருத்தி செயற்திட்டம் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. | ரூபா 02 மில்லியன் தொகைக்கான 04 நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன் ரூபா 1.5 மில்லியனுக்கான 07 நிர்மாண வேலைகள் மூலப்பொருள் விலை அதிகரித்த காரணத்தினால் செயற்படுத்த முடியாதிருந்தது என. | பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 58 மற்றும் 71 ஆகக் காணப்பட்டமையால் 22 மிகைகளை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைப் பதவிகள் அங்கீகரித்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டது என. | பதவியணி மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஜுன் மாதம் முதல் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ரூபா 250,418 இற்கான இடர்கடன் மற்றும் விழா முற்பணம் என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகள் வகைப்படுத்தப்படாமல் முறைசாரா விதமாக அகற்றப்பட்டு இருந்ததுடன், பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த சேதனப் பசளை உற்பத்தி செய்யும் குப்பை மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டம் மீளாய்வாண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் காணப்படாமையால் சேதனப் பசளை செயற்களம் நிர்மாணிக்க முடியாமல் போனது என. | குப்பைகள் முறையற்ற விதமாக அகற்றப்படக் கூடாது. அத்துடன் மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். |